PRINCIPAL
J/ Ilavalai Meibandan Mahavidiyalayam
ILAVALAI.
MA 684

# மணி விழா

## பேராசிரியர் ப.சந்திரசேகரம் அவர்கள்

9.134

28.03.1987

# மலர்

# திரு கல்வி நிறுவனம்

வடமாகாணத்தில்

அறிவும் அனுபவமும் மிக்க ஆசிரியர்களினால் கற்பிக்கப்பட்டு சிறந்த பெறுபேறுகளை பெற்றுத் தரும் புகழ் மிக்க கல்வி நிறுவனம்.

★ விஞ்ஞானம் ★ கணிதம்

★ கலை ★ வர்த்தகம்

அனைத்துப் பாடநெறிகளிலும்

G. C. E. O/L

G. C. E. A/L

திட்டமிட்ட முறையில் கற்பிக்கும்

ஒரே நிறுவனம்

மணிவிழாக் காணும் பேராசிரியருக்கு

எமது நிறுவனத்தின்

மனப்பூர்வமான வாழ்த்துக்கள்

PRINCIPAL
J/ Ilavalai Meihandan Mahavidiyalayam
ILAVALAI.

பெருமக்களே!

நமது பெருமதிப்புக்கும் பேரன்புக்கும் உரிய ஆசான் பேராசிரியர் ப.சந்திரசேகரம் அவர்களின் பணியும் பயனும் நிறைந்த அறுபது ஆண்டுகள் நிறைவு எய்துவதை வாழ்த்தி மகிழ்வதற்காக அப்பெருந்தகைக்கு மணிவிழா எடுத்துக் கொண்டாடுவதெனக் கல்விக் கழகம் முடிவு செய்தது.

மணிவிழா மலர் வெளியிடும் பொறுப்பை கழகம் எம்மிடம் ஒப்படைத்தது.

நாம் இப்பணியை மிக்க மகிழ்வுடன் தலைமேற்கொண்டோம்.

பேராசிரியரை வாழ்த்தக் காத்திருப்போர் அநேகர்.

எல்லோரிடமும் எம்மால் ஆசியுரைகள் பெறமுடியவில்லை.

பல இடர்ப்பாடுகள் மத்தியில் நாம் இம் மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

குறைகள் இருப்பின் சான்றோர் பொறுத்தேற்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.
இம்மலர் மலர
ஒவ்வொரு வகையில் துணையாய் நின்ற
எல்லோருக்கும் எமது நன்றிகள்!
பேராசிரியர் என்றும் வாழ்க!

மலர்க்குழு:

மா.சின்னத்தம்பி
திருமதி வ. கந்தசாமி
யோ. பெனடிக்ற்பாலன்

மணிவிழாக் காணுகின்ற
கல்வியியற் புலத் தலைவர்
பேராசிரியர் ப. சந்திரசேகரம்
அவர்களுக்கு
எமது நல்வாழ்த்துகள்

# வீடியோ பிரசாத்

கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

---

மணிவிழாக் காணும்
பேராசிரியர் அவர்கள்
நீடூழி வாழ வாழ்த்துகிறோம்

# பொன்ட் கல்வி நிறுவனம்

சித்தங்கேணி, யாழ்ப்பாணம்.

# கல்விக்கழகம்

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை

காப்பாளர்
பேராசிரியர் ப. சந்திரசேகரம்
கல்வியியற்புலத் தலைவர்

தலைவர்
திரு. என். கே. தர்மலிங்கம்

செயலாளர்
திரு. எஸ். சிவநாயகமூர்த்தி

பெரும் பொருளாளர்
திரு. கே. சின்னத்தம்பி
விரிவுரையாளர் கல்வியியற்புலம்

துணைத்தலைவர்
திரு. வி. குகாதரன்

துணைச்செயலாளர்
திரு. பி. சிவராஜா

---

துணைப்பொருளாளர்:

திருமதி ஆர். இருதயநாதன்

பதிப்பாசிரியர்:

திரு. யோ. பெனடிக்ற்பாலன்

செயற்குழு உறுப்பினர்கள்:

திரு. எஸ். பொன்னம்பலம்
திரு. எம். சின்னத்தம்பி
திரு. எஸ். கலாதரன்
திருமதி என். நல்லைநாதன்
திருமதி பி. எவ். அல்பிரட் சின்னத்துரை

நூல் வெளியீட்டுக் குழு:

திரு. ஜி. பி. அல்பிறெட்
திரு. ரி. துரைசிங்கம்
திரு. வி. சர்வேசுர ஐயர்

மலர்க்குழு:

திரு. மா. சின்னத்தம்பி
திருமதி வ. கந்தசாமி
திரு. யோ. பெனடிக்ற்பாலன்

அன்புக்கினியோன்
எங்கள் பேராசான்
அறுபது நிறைந்தும்
இன்னும் பல்லாண்டுகள்
இனிமையுடன் வாழ
அரும் பெரும் பணிகள்
ஆர்வமுடன் ஆற்ற
எங்கள் இதயங்கள்
ஆசிக்கின்றன!

கல்விக்கழகம்

# கல்விக் காவல, கருணை மிக்கோய் களிப்புடன் இனிது வாழ்க!

## வெண்பா

கல்விக் கடல்மூழ்கிக் காசினியோர் போற்றுகிற
நல்முத்து யாவும் நயந்தளிப்போன் - பல்கலைசேர்
சந்திர சேகரனூர் தக்கோர் புகழ்புலவன்
செந்தமிழ்போல் வாழ்க செழித்து.

## விருத்தம்

யாவரும் புகழு கின்ற
யாழ்வளா கத்தில் கல்வி
மேவிடும் பீடத் திற்கே
மேன்மைசேர் தலைவ னாகிப்
பூவினர் வியக்கும் வண்ணம்
புலமையைக் காட்டும் கல்விக்
காவல கருணை மிக்கோய்
களிப்புடன் இனிது வாழ்க!

செந்தமிழ் வடிவாய் நின்றே
சிறப்புடன் பயில்வோர்க் கெல்லாம்
சந்ததம் கல்வி யூட்டிச்
சால்புற வைக்கும் வல்லோய்
சிந்தையைத் தூண்டு கின்ற
சீரிய கருத்தின் செல்வ
எந்தையே புகழ்ப டைத்து
இனிதுடன் நீடு வாழ்க!

ஆழமாய்க் கற்றுத் தேர்ந்தே
அறிந்தவை யாவும் தூய
கோலமார் குரலி னாலும்
கொண்ட நற் பண்பி னாலும்
சாலவே யூட்டி நாளும்
தக்கவ ராக்கி வைக்கும்
சீலனே சிறப்பி னோடு
செகமிசை இனிது வாழ்க!

தமிழ் முனி விபுலா னந்தர்
தந்தநற் கொழுந்தே அன்னார்
அமுதெனத் தந்த கல்விக்
கணிகல மானோய் எங்கள்
குமுறிடும் நிலையைக் கண்டு
குரல்தரும் இனியோய் அன்பின்
செழுமையின் வடிவே சந்திர
சேகர இனிது வாழ்க!

செந்தமிழ் வடிவே வாழ்க!
செழுங்கலை உருவே வாழ்!
பைந்தமிழ் கலையே வாழ்க!
பல்கலைக் கணியே வாழ்க!
சுந்தரப் பாடும் மீன்சேர்
தொல்மட்டு நகரம் தந்த
எந்தையே ஈழ நாட்டுக்
கேற்றமாய் வந்தோய் வாழ்க!

**கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை.**



பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்கள்
கல்வியியற்புலத் தலைவர்

# பேராசிரியரின் வாழ்வும் பணியும்

| | | |
|---|---|---|
| 1926 | யூலை 17 | — பிறப்பு, மண்டூர் மட்டக்களப்பு. |
| 1930 — 1934 | | — ஆரம்பக்கல்வி, மண்டூர் இராமகிருஷ்ண மிசன் தமிழ்ப் பாடசாலை. |
| 1935 — 1936 | | — திருகோணமலை இந்துக் கல்லூரி. |
| 1937 — 1947 | | — இடைநிலைக் கல்வியும் உயர்நிலைக் கல்வியும் சிவானந்தாக் கல்லூரி, மட்டக்களப்பு. |
| 1947 — 1948 | | — யாழ். மத்திய கல்லூரி |
| 1948 — 1951 | | — பட்டப்படிப்பு—கொழும்பு பல்கலைக்கழகம். |
| 1952 — 1953 | | — ஆசிரியப்பணி — சிவானந்த வித்தியாலயம் மட்டக்களப்பு. |
| 1953 — 1954 | | — பட்டப் பின் கல்வித் தகைமைச் சான்றிதழ்ப் பாடநெறி — கொழும்பு பல்கலைக்கழகம். |
| 1954 — 1955 | | — விரிவுரையாளர்– டெல்கி பல்கலைக்கழகம். |
| 1956 — 1961 | | — ஆசிரியப்பணி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி யாழ்ப்பாணம். |
| 1961 — 1970 | | — விரிவுரையாளர்– பேராதெனியா பல்கலைக்கழகம். |
| 1970 — 1980 | | — சிரேட்ட விரிவுரையாளர்– கொழும்பு பல்கலைக்கழகம். |
| 1980 — 1985 | | — துணைப் பேராசிரியர் யாழ். பல்கலைக்கழகம். |
| 1985 — முதல் | | — கல்வியியற் புலத்தலைவர் கல்வியியற் புலம் யாழ். பல்கலைக்கழகம். |

## அதிதிப் பேராசிரியரும் வருகை தரும் பேராசிரியரும்

இலண்டன் பல்கலைக்கழகம்

மதுரை காமராஜ் பல்கலைக்கழகம்

கேரளப் பல்கலைக்கழகம்

கர்னாடகப் பல்கலைக்கழகம்

## புலமைப் பரிசில்கள்

டென்ஹாம் புலமைப் பரிசில்

நடராஜா புலமைப் பரிசில்

இந்திய அரசுப் புலமைப் பரிசில்

## உறுப்பினர்

இலங்கைத் தேசிய கல்விக்கழகம்

பிரித்தானிய ஒப்பீட்டுக் கல்விக் கழகம்

அவுஸ்திரேலிய கல்வி நிருவாகக் கழகம்

## ஆக்கிய நூல்கள்

கல்வித் தத்துவம்

கல்விச் சிந்தனைகள்

கல்வியியற் கோவை

# அதி வணக்கத்துக்குரிய ஆயரின் ஆசிர்வாதம்!

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்
24. 03. 87

பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்கள் 1952 ஆம் ஆண்டு முதல் ஓராண்டு காலம் கொழும்புப் பல்கலைக் கழகத்திலே பட்டப் பின் கல்வித் தகைமைச் சான்றிதழ் நெறியில் என்னோடு பயின்றவர். பழகுவதற்கு இனியவர்.

பேராசிரியர் எட்டு ஆண்டுகள் பாடசாலைகளில் ஆசிரியராகக் கல்விப் பணி புரிந்துள்ளார்கள். கால் நூற்றாண்டுக்கு மேல் இலங்கைப் பல்கலைக் கழகங்களில் கல்வியியற் புலத்தில் விரிவுரையாளராகவும், துணைப் பேராசிரியராகவும், சிறந்த சேவை ஆற்றி 1985 ஆம் ஆண்டு தொட்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கல்வியியற் புலத் தலைவராகப் பணியாற்றி வருகிறார்கள்.

அவரது அளப்பரிய சேவையினால் கல்வியற் புலம் விருத்தியடைந்துள்ளது. ஆசிரியர் சமூகம் அறிவுத் துறையில் பெருநன்மை அடைந்துள்ளது.

அறுபது வயது நிறைவெய்தி மணிவிழாக் காணும் பெருந்தகை இன்னும் பல்லாண்டுகள் நலமே வாழ்ந்து கல்விக்கும் தமிழ் மக்களுக்கும் மென்மேலும் பணி ஆற்ற அவரை எல்லாம் வல்ல இறைவன் ஆசீர்வதிப்பாராக!

வ. தியோகுப்பிள்ளை
யாழ். ஆயர்

# எங்கள் துணைவேந்தர் வாழ்த்துப்பா சூடி மகிழ்கிறார்கள்!

நவில் தொறும் நவில் தொறும் நூல்நயம் போன்றதே
பயில் தொறும் பயில் தொறும் பண்புடை யாளரின்
நற்றொடர் பென்றே நவின்றிடு வள்ளுவன்
சொற்கிலக் கணமாய்ச் சுவைதரு நண்ப!
கல்வியும் அறிவும் கருணையும் நிறைவும்
எல்லா ருடனும் இனிதே பழகிடும்
முறுவல்சேர் வதனமும் முறைமையாய்க் கொண்ட
பேரா சிரிய! பெரியோய்! அறிஞ!
ஆரா அன்புடைச் சந்திர சேகர!
அறுபதாண் டென்னும் எல்லையைக் கண்டு
மணிவிழாக் காணும் மாட்சிமை பெற்றிடும்
இந்தநாள் தன்னில் எனக்கும் உமக்குமாய்
நாற்பதாண்டுகளாய் நயந்திடும் உறவினிற்
கிளைத்திடும் நினைவுகள் உளத்தினில் நிறையும்
ஒன்றா இரண்டா? உரைத்திட முடியுமா?
மட்டுமா நகரின் மங்காப் பெரும்புகழ்
தாரணி போற்றத் தந்து நிறுத்திய
யாழ்நூல் வித்தகன் நாடறி பண்டிதன்
தமிழ்த்துறை தனக்கு முதற்பே ராசான்
என்னாசிரியனாய் இதயங் கவர்ந்தவன்
விபுலா நந்தனின் வழிவரும் இளைஞனாய்ப்
பல்கலை மன்றிலே உம்மைக் கண்டனன்
கலைபயில் தாகம் நிறையும் கண்களும்
கண்டோர் நட்பாய்ப் பழகிடும் முறுவலும்
கொண்டதோர் மாணவ னாகநீர் என்னிடம்
பயின்றிட வந்தீர். உம்முடன் அந்நாள்
என்னிடம் பயின்றனர் பலர் இன்றில்லை.
அண்மையில் மறைந்த சண்முக சுந்தரம்
அவரும் ஒருவர். அவரையும் உமையும்போற்
பலரது நினைவுகள் மனதில் வருவன
உம்மிடம் அன்று யான் உற்று நோக்கியதோர்
கலைபயில் ஆர்வமும் கண்ணியம் விநயமென்று
உயர்ந்த நற்பண்புகள் தாமும் ஒன்றாய்த்
தொடர்ந்தின்று வரையும் வளரக் காண்கிறேன்.

பட்டப் படிப்பு முடிந்த பின் ஸ்கந்தா
கல்லூரியில் நீர் கல்வி கற்பித்ததும்
பின்னர் கல்வித் துறையிலே மேல்நிலை
எய்தக் கருதியே பல்கலைக் கழகத்தில்
ஆசானாக அமைவுற வந்ததும்
முதுகலை கலாநிதி முதலிய தகுதிகள்
பெறுதற்காக மேனாடு சென்றதும்
ஆகிய எல்லா நிகழ்விலும் உம்முடன்
அருகிருந்தே நும் வளர்ச்சியைக் கண்டேன்.
கொண்ட கொள்கையை விடாமன உறுதியாற்
கலாநிதியாகும் வாய்ப்பையும் துறந்த
உம் தியாகத்தை எண்ணிச் சிலிர்த்தேன்.
இந்த உறுதி எவர்க்குத்தான் வரும்?
நந்தமிழ் மானம் நாட்டினை நிலத்தில்.
உம்மிடம் பயின்று கல்வித் துறையில்
உயர்ந்தனர் பலபேர் உண்டு இந்நிலத்தில்.
கலாநிதியாக, முதுகலை மாணியாய்
கல்விடிப்ளோமா பட்டதாரிகளாய்
நின்பெயர் நாட்டி நின்றனர் பலபேர்.
பேராதனையிலும் கொழும்பிலும் கல்வியை
ஆராதனை செய்தறிவை வளர்த்த
பெருமையுடனே யாழ்நகர் வந்து
எம்கலைக் கழகம் இலங்கிடும் வண்ணம்
கல்வித் துறையினை வித்திட்டு வளர்த்தனை.
பேராசிரியப் பெருமையும் பெற்றனை.
இத்தனை சிறப்பையும் அருகருகிருந்தே
கண்டு களிக்கவும் வாழ்த்தவும் எனக்கு
வாய்த்தது பேறு. வளர்க இத்தொடர்பு.
என்னுடை வாழ்வில் இன்பிலும் துன்பிலும்
அன்புடன் ஆதர வளித்தனை நண்ப!
இன்று நும் மணிவிழா எய்திடும் இந்நாள்
நந்தமிழ் மொழியிலே நயந்து வாழ்த்துதற்கு
உள்ள சொல்யாவையும் ஒன்றுய்த் தேர்ந்து
சொன்மாலை சூட்ட விழைந்தனன் அன்ப!
என்மாலை ஏற்றருள்வாய் இன்று.

* *

**பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன்**
—துணைவேந்தர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
24.3.87

# கலைப் பீடாதிபதி
# பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் அவர்களின்
# நல்லாசிகள் !

பல்கலைக்கழக ஆசிரிய சேவையில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகப் பலரும் போற்றும் வண்ணம் பணிபுரிந்து வருபவர் பேராசிரியர் சந்திரசேகரம் அவர்கள்.

பேராசிரியர் சந்திரசேகரத்தின் பல்கலைக்கழகச்சேவை, பேராதனைப் பல்கலைக் கழகத்தில் ஆரம்பித்து, கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நீடித்து, அதன் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தொடர்கிறது.

மூன்று பல்கலைக்கழகங்களிலும் கல்வித்துறைகளின் வளர்ச்சியில் பெரும் பங்களிப்பினைச் செய்துள்ளார். கல்வியில் பட்டப்பின் டிப்புளோமா, முதுகலைமாணி ஆகிய பாடநெறிகளின் விருத்தியில் பேராசிரியர் சந்திரசேகரத்தின் பணி போற்றத்தக்கது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வித்துறையின் தலைமைப்பீடத்தை ஏற்ற காலத்திலிருந்து அத்துறையினது வளர்ச்சியில் பேராசிரியரின் பங்களிப்பு நிரந்தரமான ஒரு இடத்தினைப் பெற்றுள்ளது.

கல்வியியலின் பல்வேறு அம்சங்களைப் பற்றி நிறைந்த அறிவைக் கொண்டவராயினும், கல்வித் தத்துவங்களில் சிறப்புத் தேர்ச்சியினையும் ஈடுபாட்டையும் கொண்டிருப்பவர் பேராசிரியர் அவர்கள். அவருடைய தரம் வாய்ந்த கட்டுரைகளும் நூல்களும் இதற்கு சான்று கூறுகின்றன.

மகாத்மா காந்தி, ராதாகிருஷ்ணன், பேற்றனட் றசல், கார்ல் மார்க்ஸ் போன்ற சிறந்த சமூக சிந்தனையாளர்களின் செல்வாக்கு பேராசிரியர் சந்திரசேகரத்தின் எண்ணங்களிலும், கருத்துக்களிலும் நிறைந்து காணப்படுகிறது.

சமூக முன்னேற்றமும் சமூக சீர்திருத்தமும் பேராசிரியர் சந்திரசேகரத்தின் வாழ்க்கையில் பிரதான இடத்தை வகிக்கின்றன.

சைவத்தில் போதியளவு ஈடுபாடும் பற்றும் கொண்டவராயினும் எல்லா மதங்களையும் வரவேற்று மதிப்பு வழங்கும் சிறந்த பண்பினைப் பின்பற்றி வருபவர் பேராசிரியர் சந்திரசேகரம் அவர்கள்.

சிறந்த கல்விமான், ஆராய்ச்சியாளர், ஆசிரியர் என்ற மூன்று பணிகளிலும் மேலும் பல ஆண்டுகளுக்கு பேராசிரியர் சந்திரசேகரம் ஆசிரியர் சேவையாற்ற வேண்டும் என்பதை அவரின் மாணவர்கள், அன்பர்கள் அனைவரும் வேண்டி நிற்கின்றனர்.

மட்டக்களப்பினைப் பிறப்பிடமாகக் கொண்டு, யாழ்ப்பாணத்தை வாழ்விடமாகக் கொண்டு கிழக்கும் வடக்கும் சேர்ந்து இருப்பதனைப் பெரிதும் விரும்பும், அதற்கு சிறந்த எடுத்துக்காட்டான, 'சந்திரன்' அவர்களுக்கு மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

பேராசிரியர்: நா. பாலகிருஷ்ணன்
கலைப்பீடாதிபதி.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## மருத்துவ பீடாதிபதி

## கலாநிதி 'நந்தி' அவர்களின்

# இதயபூர்வமான வாழ்த்துக்கள்!

பேராசிரியர் ப. சந்திரசேகரம் எமது சந்ததியின் சிந்தனையாளர்களில் ஒருவர். மிகவும் அமைதியாக ஆணித்தரமான கருத்துக்களைக் கூறுபவர். அந்தக் கருத்துக்கள் அவரின் பலதரப்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் இருக்கும். சோஷலிஸ சார்புள்ள அரசியல், ஆத்மீகம், இராமகிருஷ்ண பரமஹம்சரின் கொள்கைகளில் ஆத்துமாத்த தொடர்பு, விபுலானந்த அடிகளின் கல்விக் கோட்பாடு, தமிழரின் வரலாற்று, இலக்கிய ஞானம், ஈழத்தின் கிழக்குப் பூமிமேல் ஒருபற்று — இத்தகைய பல்வகைப்புல ஈடுபாட்டில் விளைந்தவை அவரது கருத்துக்களும், கல்விக் கோட்பாடுகளும். அவற்றை எக்காரணம் கொண்டும் விட்டுக் கொடுக்காத மன வலிமை உள்ளவர்.

அவருடன் நட்பும் தொடர்பும் எனக்கு 1969 ஆம் ஆண்டு லண்டனில் ஏற்பட்டது. 'சந்திரா'வுக்கு சில நுட்பமான பழக்க வழக்கங்கள் உண்டு. அவை குறுகிய எல்லைகளுக்கு அப்பாற்பட்டவை. தமது கடவுளை இங்கிலாந்தில் சேர்ச்சில் போய் வணங்குபவர். தனது தமையனின் அஸ்தியை தேம்ஸ் நதியில் கரைத்தவர். பணக் கஷ்டம் இருந்த காலத்திலும் இருப்பிடம், உடை, உணவு ஆகியவற்றின் தரத்தைக் குறைக்காதவர். ஆராய்ச்சி செய்த காலத்தில் பிரித்தானிய மியூசியம் திறக்க முன்பே வாசலில் நின்று அந்தியில் கடைசியாக வெளியேறும் பேர்வழி அவர். அவர் மந்திரியாகாமல் பேராசிரியரானது தமிழரின் பெரும்பேறு.

நண்பர் சந்திராவுக்கு மணிவிழா! மேலும் பல்லாண்டு நலமுடன் வாழ்ந்து தொடர்ந்து பணி செய்ய வாழ்த்துகிறேன்!

நந்தி
(செ. சிவஞானசுந்தரம்)
மருத்துவப் பீடாதிபதி
யாழ். பல்கலைக்கழகம்

விஞ்ஞான பீடாதிபதி

பேராசிரியர் க. குணரத்தினம் அவர்களின்

# ஆசியுரை!

பேராசிரியர் ப. சந்திரசேகரம் முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாகக் கல்விப்பணியில் ஈடுபட்டு வருபவர். முதலில் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பின்பு கொழும்புப் பல்கலைக் கழகத்திலும் இறுதியில் யாழ். பல்கலைக்கழகத்திலும் பணியாற்றி சிறந்த கல்விமான்களை உருவாக்கியவர். தமது அறிவுத்திறனாலும் மற்றவர்களுடன் அன்பாகப் பழகும் சுபாவத்தாலும் தம் மாணவர்களையும் சக ஆசிரியர்களையும் கவர்ந்து அவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர். இவரின் ஆற்றலுக்கும் சிறந்த சேவைக்கும் இவரின் தலைமையின் கீழ் 1980 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது வளர்ச்சியடைந்த நிலையில் உள்ள கல்விப்புலத்துறையும் பல்வேறு தாபனங்களில் பொறுப்பு மிக்க பதவிகளை வகிக்கும் இவரின் நூற்றுக்கணக்கான மாணவர்களுமே போதியசான்றாகும். கல்வியியல்பட்டப்பின் டிப்புளோமா, முதுகலைமாணி ஆகிய பாடநெறிகள் தொடர்ந்தும் சீரான முறையில் யாழ். பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்படுவதற்கு இவர் ஆற்றும் பணி குறிப்பிடத்தக்கது.

இவரின் மணிவிழா சிறப்புற நடைபெறவும் இவர் மேலும் பல ஆண்டுகள் கல்வித்துறைக்கு பணியாற்றவும் வாழ்த்துகிறேன்!

பேராசிரியர் க. குணரத்தினம்
பீடாதிபதி, விஞ்ஞான பீடம்
யாழ். பல்கலைக்கழகம்.

# பதிவாளர் வே.ந.சிவராசா அவர்களின்

# உளம் நிறைந்த வாழ்த்துக்கள்!

பேராசிரியர் சந்திரசேகரம் அவர்கள் அறுபது ஆண்டுகள் நிறைவு பெறுவதைக்குறித்து மணிவிழாக் கொண்டாடுவது பாராட்டுதற்குரிய, மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சி. மணிவிழா மலர் வெளிவருவது அன்னாரது ஆற்றலையும், அடக்கமான சேவையையும் உலகறியச் செய்யும்.

பட்டப்படிப்பை மேற்கொள்ளும் பட்டதாரி ஆசிரியர்கள், மற்றும் கல்வித் துறை அலுவலர் ஆகியோரை நெறிப்படுத்தி கலாநிதிப் பட்டம்வரை அவர்களது கல்வி பூரணத்துவம் பெற உதவும் பேராசிரியர் எவ்வளவு பொறுப்பும், தகைமையும் உடையவர் என்பதை உணர்த்தும்.

அன்னாரது சமரச சன்மார்க்க நோக்கும் ஆணித்தரமான கோட்பாடுகளும் சமூக சீர்திருத்த இலட்சியமும் யாம் அறிந்ததே. பகவான் சத்தியசாயிபாபா அவர்களின் கல்விப்பணி, இராமகிருஷ்ண பரமஹம்சர் அவர்களது கல்விச் சிந்தனைகள் ஆகிய விடயங்கள் பற்றி அண்மையில் பேராசிரியர் நிகழ்த்திய பேருரைகள் சான்றோர் ஆய்ந்திடத்தக்க பொருள் பொதிந்தவை.

மட்டக்களப்புப் பல்கலைக்கழக வளர்ச்சியினை மனதில் கொண்டு அவர் எழுதிய கட்டுரைகள் பல்கலைக்கழக வளர்ச்சியிலும் மக்களின் மேற்படிப்பிலும் பொதுவாக சமூக நலனிலும் அன்னார் கொண்டுள்ள அடக்கமான ஆர்வத்தை எடுத்துக் காட்டுவன.

மணிவிழாக் கண்ட மகான்கள் சிலரோடு நெருங்கி யாவும் இணைந்து சேவை செய்யும் எனக்குக் கிடைத்த வாய்ப்பில் நான் காணக்கூடிய ஒரு உண்மை, மணிவிழாவின் பின்பு அவர்கள் புத்திளமை பெற்று புத்தம் புதிய ஆர்வத்துடன் கூடுதலான ஆராய்ச்சிகளையும் வெளியீடுகளையும் மேற்கொண்டமையாகும்.

சுகந்தமான வாழ்வும், ஆன்மபலமும் நிரம்பப்பெற்று கல்வித்துறையில் மேலும் பல அருங்கனிகளை மணிவிழாக் காணும் பேராசிரியர் சந்திரசேகரம் நமக்கு வழங்கி, பழமுதிர்ச் சோலையாக விளங்க எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டுகிறேன்.

**வே. ந. சிவராசா**
பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## மட்டக்களப்பு பல்கலைக்கழகப் பதிவாளர்
## ஜனாப். எஸ். எச். ஜமீல் அவர்கள்
## வாழ்த்துகிறார்கள்

எமது மதிப்புக்குரிய பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்களுக்கு மணிவிழா எடுப்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்ற அவரது மாணவர்களில் நானும் ஒருவன். தமிழிலே கல்வியியற் புலத்திலே பல நூறு சிந்தனைகள் மலர வேண்டுமென ஆசைப் படுகின்ற பேராசிரியர் அவர்கள் அந்தப் பணியில் சிறப்பாக தமது கல்வி முதுகலைமாணி மாணவர்களை நெறிப்படுத்துவதிலும் கண்ணும் கருத்துமாய் இருந்து வருகிறார்கள்.

மட்டக்களப்பு பெற்றெடுத்த பேராசானையிட்டு மட்டக்களப்புத் தமிழ் பேசும் மக்கள் யாவரும் பெருமைப்படுகிறார்கள்.

மட்டக்களப்புப் பல்கலைக்கழகத்தின் தோற்றத்திலும், அதன் பூரணத்துவ வளர்ச்சியிலும் பெரும் அக்கறை கொண்டு அதற்காக உழைத்தவர்களுள் பேராசிரியரும் ஒருவராவர்.

இன, மத, பேதமில்லாது யாவரும் முன்னேற வேண்டுமென மனப்பூர்வமாக விரும்புகின்ற பேராசிரியர் அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து கல்விப்பணி ஆற்ற அவர்களுக்கு இறைவன் ஆசி கூறுவானாக!

எஸ். எச். ஜமீல்
பதிவாளர்.
மட்டக்களப்புப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்
கல்விக் கழகம் நடத்தும்,

## பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்களின்

# மணிவிழா

*காலம்:* 28-03-87 சனிக்கிழமை காலை 9-00 மணி

*இடம்:* யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மண்டபம்

*தலைமை:* திரு. க. தருமலிங்கம், தலைவர், கல்விக்கழகம்

## நிகழ்ச்சி நிரல்

மங்கல விளக்கேற்றல்

தமிழ்த்தாய் வணக்கம்

*வரவேற்புரை:* திருமதி இ. இருதயநாதன்

*தலைமையுரை:* தலைவர்

*மணிவிழா மலர் வெளியீடு:* திரு. யோ. பெனடிக்ற்பாலன்

நூல் வெளியீடு:

*பேராசிரியரின் நூல் 'கல்வியியற்கோவை': வெளியீடு:*
திரு. ஜி. பி. அல்பிறட்

*நூலறிமுகவுரை:* கலாநிதி சபா. ஜெயராசா

முதற்பிரதி பெறுநர்:

*சிவதருமவள்ளல்*
க. கனகராசா அவர்கள்
*(உரிமையாளர்: மில்க்வைற் தொழிலகம்)*

ம. சிவராசா
*(ஆளுநர்நாயகம், றெனிகுளோப், முரசொலி)*

எஸ். தியாகராஜா, ஜே. பி.
*(உரிமையாளர்: எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்)*

சிறப்புப்பிரதி பெறுநர்:

திரு மா. சின்னத்தம்பி

திரு. ஆ. கமலநாதன்

திரு. பி. எம். ஜே. அன்ரனி

திருமதி பி. எவ். சின்னத்துரை

திருமதி ரீ. கந்தசாமி

திருமதி இ. பாலசுந்தரம்

ஆசியுரை: துணைவேந்தர் பேராசிரியர்
சு. வித்தியானந்தன் அவர்கள்

வாழ்த்துரை: ஜனாப். எம். எம். மன்சூர்
(கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்)

திரு. நா. பாலகிருஷ்ணன்
(கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)

திரு. வ. ஆறுமுகம்
(சிரேட்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

பதிலுரை: பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்கள்

நன்றியுரை: சு. சிவநாயகமூர்த்தி அவர்கள்
(செயலாளர், கல்விக்கழகம்)

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்

கல்விக்கழகம்
யாழ். பல்கலைக்கழகம்

வட மாநிலக் கல்விப்பணிப்பாளர்
ஜனாப் எம். எம். மன்சூர் அவர்களது

# உளம் நிறைந்த ஆசிகள்!

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கல்வியியற்புலத் தலைவர் பேராசிரியர் ப. சந்திர சேகரம் அவர்களது அறுபது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்படும் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அன்னாரது மாணாக்கன் என்ற வகையில் மட்டற்ற மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகின்றேன்.

மண்டூரில் பிறந்து இணுவையூரில் புகுந்து வடக்கிற்கும், கிழக்கிற்கும் கல்விப் பாலம் சமைத்து அறுபது ஆண்டெல்லை கடந்த பின்பும் கல்வித் தொண்டாற்றி வரும் எனது பேராசான் ஒரு தத்துவப் பெருந்தகை.

மேலைத்தேய, கீழைத்தேய தத்துவ ஞானிகளின் கல்விக் கருத்துக்களைக் கருத் தூன்றிக் கற்ற இவர் நமக்களிக்கின்ற கல்வித் தத்துவம் "கல்வியைக் கருத்தூன்றிக் கற்பவன் கடவுளைக் காண்பவன்", "கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன்" என்பதாம்.

இவரது தந்தை மண்டூர் திரு. பத்தக்குட்டி அவர்கள் மேற்கொண்ட ஆசிரியத் தொழிலையே தன் தொழிலாக 1951ல் ஆரம்பித்து பத்தாண்டு காலம் பணி புரிந்து 1961 இல் கொழும்பு பல்கலைக் கழகத்தின், கல்விப் பீடத்தின் விரிவுரையாளராகக் கடமையாற்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியியற் புலத்தின் கல்விப் பேராசிரிய ராகவும், தலைவராகவும் இன்று கடமை புரிகின்ற இவர், கல்வியானது மாறா இளமை யும், அழகும் கொண்டது என்று கூறுபவர். அக் கூற்றின்படி அதனைக் கற்ற தன்னை யும் அவ்வாறு ஆக்கிக் கொண்டவர். வயது அறுபதைத் தாண்டியும் இளமைத் துடிப் புடன் கருமமாற்றி வருபவர். 1980 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வியியற்புலம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டபோது பட்டப்பின் கல்வித் தகைமை நெறிக்கான (**Diploma in Education**) ஐம்பது மாணவர்களை மட்டும் கொண்டி ருந்த இக் கல்வியியற்புலம் ஆறு ஆண்டெல்லைக்குள் தனது கற்கை நெறிகளை விசா லித்து ,முதுகலைக் கல்விமாணிகள் (**Master of Arts in Education**) கல்விக் கலாநிதிகளை (**Ph. D in Education**) உருவாக்கக் காரணமாக அமைந்தவர் இவர்.

1987 மார்ச் மாத இறுதிக்குள்ளாக 23 கல்வி முதுகலைமாணிகளையும் ஒரு கல்வி கலாநிதியையும் கல்வியியற் புல விரிவுரையாளர்களின் கருத்தொருமித்த செயற்பாட்டி னாலும், ஆளுமையாலும், தலைமைத்துவத்தினாலும் கல்வியுலகுக்கு அன்னார் அளித்துள்ள மையும், மேலும் பல மாணாக்கர்கள் ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளமையும் அவர் தம் கல்வித் தொண்டிற்கு அணிகலன் பூட்டுவன.

தன்னல மறுப்பு அவர்தம் கொள்கை. 1984இல் அரசாங்கம் பட்டப்பின் கற்கை நெறிகளுக்கான சம்பளத்துடன் கூடிய கற்றலுக்கான விடுமுறைகளை இரத்துச் செய்த போது, இளந்தலைமுறையினரின் கல்வியின்பால் அக்கறை கொண்ட பேராசான் தன் விரிவுரையாளர் குழாத்துடன் 101 அரசாங்கப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு சன்

மானம் எதுவுமின்றியும், தமக்கே உரித்தான கிழமை இறுதி விடுமுறைகள், பல்கலைக் கழக விடுமுறைகள் அனைத்தையும் துறந்து கருமமாற்றிப் பயிற்றுவிப்பதும், தனியார் பாடசாலை ஆசிரியர்களுக்கு நாள்தோறும் பட்டப்பின் கல்விப் பயிற்சிநெறி அளிப்பதும் அவர் தம் தியாக உணர்விற்கு எடுத்துக்காட்டு. தமிழ் கூறும் நல்லுலகம் அன்னாருக்கு என்றென்றும் கடமைப்பட்டதும், நினைவுகூரவேண்டியதுமாகும். கல்விசார் தொழிலில் நாட்டங் கொண்டுள்ள சகலருக்கும் பயன்படும் விதத்தில் அவர் வெளியிட்டுள்ள கட்டுரைகள், கருநூலங்கள் பல. அவர் உலக நாடுகளில் பங்குபற்றிய கருத்தரங்குகளும், வாசித்தளித்த ஆய்வுக் கட்டுரைகளும் பல. இலங்கையில் கல்வி வரலாற்றில் புதிய கல்விக் கொள்கையாக்கங்கள் வகுக்கப்பட்டபோதெல்லாம் விளக்கமளித்தவர் இவர். பிழைகளைத் துணிந்து கூறும் பாங்கு அவருக்கு உரித்தானது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கல்வியியற் புலத்தின் பேராசானாக மட்டுமன்றி மதுரை காமராஜ் பல்கலைக்கழகம், கேரளப் பல்கலைக்கழகம், இந்தியகாந்தி கிராம் பல்கலைக்கழகம், அண்ணாமலை ஆசிரியர் கல்லூரி, காந்திகிராம் ஆசிரியர்கல்லூரி ஆகியவற்றின் அதிதிப் பேராசிரியராகவும் (**Guest Professor**) இலண்டன் பல்கலைக் கழகத்தில் வருகை தரும் பேராசிரியராகவும் (**Visiting Professor**) கடமையாற்றி வருகின்றார்.

இலங்கைத் தேசிய கல்விக் கழகம்(**NATIONAL EDUCATION SOCIETY —SRI LANKA**) பிரித்தானிய ஒப்பீட்டுக் கல்விக் கழகம் (**COMPARATIVE EDUCATION-SOCIETY GT. BRITAIN**) அவுஸ்திரேலிய கல்வி நிர்வாகக் கழகம் (**EDUCATIONAL ADMINISTRATION— AUSTRALIA**) ஆகியவற்றின் அங்கத்தவராகவும் இவர் விளங்குகின்றார்.

இவரது கல்வி மேம்பாட்டினையும், கல்விச் செயற்பாடுகளையும், ஆழமான கருத்துக்களையும் அறிந்து உலகத்தில் பிரபல்யமான பல்கலைக் கழகங்கள் அகில உலக அறிஞராக இவரைக் கருதியுள்ளன. ஒவ்வொரு நாட்டிலும் ஓரிருவரே இந்த இடத்தைப் பெறுகின்றவர்கள். இந்த வகையில் எமது பேராசானை கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை அகில உலக அறிஞர் குழாத்தில் (**INTERNATIONAL DICTIONARY OF INTELLECTUALS**) சேர்த்துள்ளது. பிரித்தானியப் பல்கலைக் கழகம் கல்வியாளர் குழாத்தினுள் (**DICTIONARY OF EDUCATIONISTS**) சேர்த்துள்ளது. அமெரிக்க பல்கலைக் கழகம் அறிஞர்கள் தலைமைத்துவத்தில் (**INTELLECTUALS LEADERSHIP**) இவரைச் சேர்த்துள்ளது.

எனது பேராசான் பெற்றுள்ள இந்தப் பேறுகள் கல்வியுலகுக்கு ஈட்டிக்கொடுத்த பெருமைகள். இன மத பேதமற்ற கல்விப் பேராசான் மேலும் பல்லாண்டுவாழ்ந்து கல்வியுலகம் நன்மைபெற இறைவன் ஆசிகூறுவானாக.

**எம். எம், மன்சூர்**
கல்விப் பணிப்பாளர்
(வட மாநிலம்)

கல்விப் பணிமனை
வட மாநிலம்
23. 03. 87

## கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை
## அதிபர் செல்வி ச. சின்னப்பு அவர்கள்
# நெஞ்சார வாழ்த்துகிறார்கள்

ஒருவருடைய வாழ்க்கையில் அறுபதாண்டு நிறைவு என்பது மகத்தான ஒரு நிகழ்வு! அதுவும் பொது வாழ்விலும் கல்விப் பணியிலும் ஈடுபட்டுள்ள ஒருவரின் அறுபதாண்டு நிறைவு என்றால் அதனைப் பெருமையோடு போற்றத்தக்க ஒரு நிகழ்வாகவே கணிக்க வேண்டும்.

பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்களின் அறுபதாண்டு நிறைவு என்பது பொது வாழ்விலும் பல்துறைப் பணிகளிலும் பயன்மிக்க பங்களிப்புச் செய்த ஒரு பெரியாரின் பருவ நிறைவு எனல் சாலப் பொருந்தும்.

கல்வித்துறையில் கடந்த கால் நூற்றாண்டு காலம் அரும் பணிகள் புரிந்த கல்வியாளர் ப சந்திரசேகரம் அவர்கள், ஆசிரிய மணிகள் பலரைக் கல்வி உலகிற்கு பட்டை தீட்டிய வைரங்களாக அளித்துள்ளார். அவருடைய மாணவர் பரம்பரை கல்வி ஒளிபரப்பும் ஞான விளக்குகளென இலங்கை முழுவதும் வியாபித்துள்ளனர் இத்தகைய பெரியாரின் மாணவ இரத்தினங்கள் அவரது அறுபதாண்டு நிறைவைப் போற்றி மணிவிழா எடுப்பதும், மணிவிழா மலர் வெளியிடுவதும் அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறேன்.

வாழ்வாங்கு வாழும் பேராசிரியர் ப சந்திரசேகரம் அவர்கள் இன்றுபோல் என்றும் நற்பணிகள் புரிந்து பலலாண்டு காலம் நலமும், வளமும் பெற்று வாழ்கவென நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

ச. சின்னப்பு
அதிபர்
கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை

## MESSAGE FROM THE
## PRINCIPAL, PALALY TEACHERS' COLLEGE

Old wine tastes well; old wood burns well; old authers read well. So it is with old teachers. Prof. P. Chandrasegaram who is reaching his 60th year is a veteran educationist.

The present generation of teachers remember him as one who left a lasting impression in their minds. The future generations shall remember him as one who moulded their minds and encouraged them to strive for a better life in a world torn by strife.

I congratulate the Kalvi Kazhakam, University of Jaffna for bringing out this Felicitation volume.

**P. PARAMAESWARANATHAN,**
Principal.

# வட மாகாண அதிபர் சங்கத்தலைவரின் ஆசிகள்!

பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்களின் அறுபதாம் ஆண்டு பூர்த்தி விழா தொடர்பாக வெளியிடப்படும் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

பல்கலைக்கழகத்தில் நான் மாணவனாக இருக்கும் பொழுதே அறிமுகமான பேராசிரியர் அவர்களை நீண்டகாலமாகப் பல்வேறு நிலைகளில் தொடர்பு கொள்ள வேண்டியவனானேன். பேராதெனியாவில் கல்வி டிப்ளோமா மாணவனாய் இருக்கும் பொழுது எனது விரிவுரையாளர் என்ற முறையிலேயே அவரது அறிவு, ஆற்றல் கற்பிக்கும் திறனாகியவற்றை காணக்கூடியதாய் இருந்தது. கல்வி கற்கை நெறிகள் பயிலும் மாணவரை நல்வழிப்படுத்தி அவர்களைச் சிறந்த ஆசிரியராக்குவதே அவரது சிறப்பான பணியாயிற்று. நான் அவரது மாணவர்களின் மூத்த சந்ததியைச் சேர்ந்தவனாக இருக்க, அவர் வருடா வருடம் எத்தனையோ சிறந்த ஆசிரியர்களை உருவாக்கி வருகிறார். இவர்கள் எல்லாம் இன்றைய கல்வி உலகில் மகத்தான தொண்டு செய்து வருகிறார்கள். இந்த ஆசிரியர் மாணவர்களை வழிப்படுத்த அவர் கையாண்ட புதிய அணுகு முறைகளையும் யுக்திகளையும் அவரது மாணவர்கள் தங்கள் பிற்கால வாழ்வில் நினைவு கூர்ந்து பாராட்டுவார்கள். சைவ, தமிழ் பண்பாட்டிலிலே ஊறியவர் என்ற முறையில் கல்விப் பயிற்சியைப் பின்பற்றும் மாணவர்களை இந்தப் பண்பாட்டின் சிறப்பு அம்சங்களில் ஈடுபடச் செய்தார். அந்த வகையில் இந்தப் பயிற்சிக்கே புதிய திருப்பம் கொடுத்தார். டிப்ளோமா பயிற்சிக்கு நான் எழுதிய கட்டுரை- 'ஆறுமுகநாவலரின் கல்வித்தத்துவம்'. இதே போன்று மற்றைய மாணவர்க்கும் ஊக்கம் ஊட்டி கடந்த கால் நூற்றாண்டு காலமாக எங்கள் கல்வி வரலாற்றை பல்வேறு கோணங்களிலிருந்து ஆராயச் செய்தார்

மட்டக்களப்பில் பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலத்தில் அதிபராயிருந்த காலத்தில் அவரின் குடும்பத்தினரின் பெருமையை நான் அறியக் கூடியதாய் இருந்தது. சுவாமி விபுலானந்தரின் ஆசானாகிய மண்டூர் பந்தக்குட்டி உபாத்தியாயரே அவரின் தந்தையார். மட்டக்களப்பில் ஒரு புகழ்பூத்த கல்விக்குடும்பத்தைச் சேர்ந்தவர் பேராசிரியர் முன்னாள் பட்டிருப்பு பாராளுமன்ற உறுப்பினர் சி. மூ இராசமாணிக்கம் உட்படப் பல கல்விமான்களைக் கொண்டது அந்தக் குடும்பம். பேராசிரியர் சந்திரசேகரம் தொடர்ந்தும் நீண்டகாலம் கல்வித்தொண்டு செய்யக் கடவுள் அருள் புரிவாராக.

க. அருணாசலம்
தலைவர்
வடமாகாண அதிபர் சங்கம்

விக்டோரியாக்கல்லூரி
சுழிபுரம்

## மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை
## அதிபர் சு. புலேந்திரன் அவர்கள்
# உளம் பூரித்து வாழ்த்துகிறார்கள்

பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்கள் என வாழ்வின் உயவுகளில் மறக்க முடியாத அடிச்சுவடுகளைப் பதித்துள்ளார்கள் அவரது ஆசிரியப் பணி மூலம் பல்கலைக்கழகத்துக்குச் சென்ற முதல் மாணவர்களில் நானுமொருவன் என்பதில் எனக்கு அளவிலாத மகிழ்ச்சி!

பின்னர் பல்கலைக்கழகத்திலே அவரிடம் பட்டப்பின் கல்வித் தகமைச் சான்றிழ்ப் பாடநெறி பயின்ற போது நேசமான பிணைப்பு பேராசிரியர் அவர்கள் நல்லாசிரியனும், நண்பனும், தொண்டு செய்யும் சேவகனும், உயர் வாழ்வுக்கு வழிகாட்டும் சமரச சன்மார்க்க தத்துவ போதகனும் எம்மோடு வாழ்வதை நினைக்கையில் நெஞ்சம் பெருமையால் நிறைகிறது.

பேராசிரியர் அவர்கள் தனித்துவமான மானுடம்தான் மட்டுநர் பெற்றெடுத்த கல்வித் தத்துவ மேதையான பேராசிரியர் அவர்கள் மட்டு நகரின் கல்வி வளர்ச்சியிலும் ஆசிரியர் கலாசாலையின் உயர்விலும் மட்டுநகர்ப் பல்கலைக்கழக உருவாக்கத்திலும் ஆழமான அக்கறை கொண்டு தம்மால் இயன்றதெல்லாம் செய்தார்கள்.

அத்தகைய ஒரு பெருமகனுருக்கு அறுபது வயது நிறைவெய்தி அந்த நிறைவை அவரின் மாணுக்கர் ஒன்று கூடி மணிவிழா எடுத்துக் கொண்டாடுவது மிகமிக மகிழ்ச்சிக்குரிய விடயம்.

எமது பேராசான் அவர்கள் இன்னும் பலவாண்டுகள் நலமுடன் வாழ்ந்து தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு தொண்டு புரிய வேண்டுமென இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

சு. புலேந்திரன்
அதிபர், ஆசிரியர் கலாசாலை மட்டக்களப்பு.

# மாண்பு நிரம்புக!

-- முருகையன் --

மணி விழாக் கண்டிடும் சந்திரசேகரம்
வாழிய வாழியவே
வாழ்க்கையின் நோக்கு முழுமை நிலைபெற்று
மாண்பு நிரம்புகவே
துணிதிறன் வாய்ந்த அறிஞர் பெருமகன்
தோல்வி அறியாதான்
சூழும் பல கலை ஞானியர் போற்றத்
துலங்கி ஒளிருகவே.

கிழக்கும் வடக்கும் இணைந்தவோர் சங்கமம்
கீர்த்தி பெறும்படியாய்க்
கெம்பி எழுந்த துடிப்பின் பெருமிதம்
பின்பும் உயர்ந்திடுக.
அழுக்கும் அநீதியும் சற்றும் இல்லாத ஓர்
அன்பின் அடிப்படையில்
ஆழ்ந்த நலம் பயில் கல்வியை நாடிடும்
ஆன்மிகம் வென்றிடுக.

முத்தமிழ் வித்தகர் என்னும் விபுலர்
முயற்சி விழுமியத்தில்
மூழ்கித் திளைத்துப் பரம்பும் கலைநய
மூச்சு நலன் தொடர்க.
சித்தர்கள், தத்துவ போதகர் காட்டும்
சிறந்த பண்பாடுகளைத்
தேர்ந்து பலர்க்கும் உணர்த்த முனைந்திடும்
செய்கை வழி தொடர்க

'மாக்சை' முனிவர் எனச் சிறப்பித்திடும்
வாய்மை வழி வளர்க.
வள்ளுவர் காந்தியின் வாய்மொழி போற்றிடும்
வார்த்தை நயம் தொடர்க.

சோக்கிறற்றீசும் பிளேற்ரே முதலிய
தொல்லறிவாளர்களும்
சொல்லிய தத்துவ உண்மை விளக்கும்
சுவைத்தமிழ்ப் பண்பு வெல்க.

மூர்த்தி, தலம், தரு, தீர்த்தம் என்ருேதும்
முறைமையில் ஈடுபட்டு
முக்கனிச் செந்தமிழ்க் கட்டுரை தீட்டும்
முயற்சி தொடர்ந்திடுக.
நேர்த்தி, ஒழுங்கு, கனிவு, கருணை
நிரம்பிப் பண்புடனே
நேர்மை வழியில் இறங்கி இயங்கிடும்
ஆர்வ அறம் தொடர்க.

ஈழத் தமிழர் உயர்கல்வி பற்றிய
எண்ணம் விதைத்திடும் ஓர்
ஏற்றம் மிகுந்த உணர்ச்சியும் ஊக்கமும்
இன்னும் உயர்ந்திடுக
தாழ்வுற்ற நம்மவர் மீள்வுற்று மேம்படத்
தக்க துறைகளிலே
சார்ந்திடு மாறெம் இளைஞரை உந்திடும்
தர்மம் மிக வளர்க.

பேராசிரியர் சகல நலங்களும்
பெற்று மிளிருகவே.
பேணிய லட்சிய வீறு வளர்ந்து
பெருகி விளங்குகவே
ஆராய்வும் அன்பும் அறிவும் பொலிய
அழகுகள் பொங்குகவே
ஆற்றல் மிகுதியின் தோற்றமும் வாழ்வும்
அமைதியும் நீடுகவே

★

## பேராசிரியரின் 'கல்வித்தத்துவம்' என்னும் நூலுக்கு கு நேசையா அவர்கள் வழங்கிய அணிந்துரையிலிருந்து மேற்கோள்.

*இலங்கையின் நவீன அறிவுத் துறைகள் பலவற்றைப் போலவே கல்வித் துறையும் அத்துறையில் ஈடுபட்டு அதன் பிரதிபலிப்பாக நூல்களை வெளியிடும் ஆய்வாளர்களைப் பெருது குறைபாடுடையதாய் விளங்குகின்றது. இத்தகைய வரட்சிச் சூழலிலே ப. சந்திரசேகரம் அவர்களின் கல்வித்தத்துவம் என்னும் நூலானது கல்வியாகிய வயலுக்குச் செழிப்பு நல்க வல்லதும் வரவேற்றற்நரியதுமான நன் மழையாய் வெளிவருகின்றது. தமிழின் புதியதொரு துறையிலே இந்நூல் எழுதப்பட்டுள்ளமை இருமடங்கு வரவேற்பிற்குரியதாகும்.*

*இந்நூலாசிரியர் மீட்டும் மீட்டும் இந்தியக்கல்வி மரபிலேயே பெருமளவு மீள்பார்வை நிகழ்த்துவதோடு ஈழத்தின் ஞானிகள் எனத்தகும் ஆறுமுகநாவலர், அநகாரிக தர்மபால, சித்திலெப்பை, சுவாமி விபுலாநந்தர் ஆகிய அறிவாளர்களின் கருத்துக்களையும் ஆராய்ந்துள்ளனர்.*

---

## பேராசிரியரின் 'கல்வித் தத்துவம்' என்னும் நூல் பற்றி முன்னாள் வித்தியாதிபதியும் பிரபல கல்வி நெறியாளருமாகிய திருவாட்டி இரத்தினு நவரத்தினம் அவர்களின் கருத்து

*மேலைத் தேயக் கீழைத் தேயக் கல்விக் கோட்பாடுகளும் பயிற்சி முறைகளும் சம்பந்தமான முக்கிய கொள்கைகளுக்குப் புத்துயிரூட்டலும், கல்விப் பிரச்சினைகளை வரலாற்று ரீதியில் அணுகுதலுமாகிய முக்கிய நோக்கத்தில் ஆசிரியர் வெற்றி கண்டுள்ளார்.*

# எங்கள் பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்கள்

பேராசிரியர் ப, சந்திரசேகரம் அவர்கள் எம்நாட்டில் சிறந்து விளங்கும் ஒரு கல்விச் சிந்தனையாளர். இவரின் தோற்றமும், உயரிய பண்புகளும், கல்விச் சிந்தனைகளும், முன்னைய கல்விச் சிந்தனையாளர்களான பிளேட்டோ, ரூசோ ரவீந்திரநாத் தாகூர், காந்தியடிகள் போன்றோரை எம் முன்னே கொண்டு வந்து நிறுத்துவது போல் இருக்கும் இவரின் எளிமையான நடையும், உயரிய சிந்தனைகளும், தத்துவ ஞானிகளின் பரந்த பண்பும் எம்மால் மறக்க முடியாதவை.

யாழ். பல்கலைக்கழகத்தின் கல்வியியற் புலத்தின் தலைவராய் பணியாற்றும் பேராசிரியர் அவர்கள் கல்வித்துறையின் வளர்ச்சிக்காகப் பல அரும்பணிகள் புரிந்துள்ளார். கல்வித்துறையும் ஏனைய துறைகளோடு சிறப்புற்று விளங்கவேண்டுமென்ற விருப்பினால் கல்வித்துறையிலே பல ஆராய்ச்சிகளைச் செய்தார். உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள பல சஞ்சிகைகளில் கல்வி சம்பந்தமான பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டார். இவரின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பெரு மதிப்புப் பெற்றன. பல இடங்களிலும் பல கல்வித்தத்துவக்கருத்துக்களை மக்கள் மத்தியிலே பரப்பப் பலமேடைகளிலே உரையாற்றினார். இவரின் கல்விச் சிந்தனைகளும், கருத்துக்களும் மேலைத்தேசக் கல்விச் சிந்தனையாளர்களதும். கீழைத்தேசக்கல்விச் சிந்தனையாளர்களதும் கருத்துக்களின் ஆராய்ச்சியின் பயனாக மேலும் வளர்ச்சி பெற்றன.

இதன் பயனாகப் பல கல்வித்தத்துவ நூல்களை வெளியிட்டார். அவற்றில் பட்டதாரி மாணவர்களுக்குப் பயன்படத்தக்கமுறையில் ''கல்வித்தத்துவம்'' ''கல்விச் சிந்தனைகள்'' என்னும் நூல்கள் வெளிவந்தன.

மனிதன் ஆயுள் முழுவதும் கற்றுக்கொண்டேயிருக்கவேண்டும். கற்கமறுப்பவன் வாழமறுப்பவன் ஆகின்றான் என்னும் தத்துவக்கோட்பாட்டை அடிப்படையாகக் கூறுவார். கல்வியைக் கற்பதற்கு ஆசான் அவசியம். அதிலும் இளமையிற் கற்கும் சிறுர்களுக்கு ஆசிரியரின் வழிகாட்டல் இன்றியமையாததாகும்.

''ஆசிரியர் தான் கற்பிக்கும் பாடத்தில் மட்டும் திறமையுடையவராக இருந்தால் போதாது. பாடத்தைப் போதிக்கும் முறையிலும் திறமையுடையவராகவிருக்க வேண்டும். சிறந்த ஆசிரியன் கற்பித்தலுடனேயே நின்றுவிடல் வேண்டும். அவனால் தான் தன் மாணவர்களை உயர் நிலைக்குக் கொண்டுவர முடியும். ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் சிறந்த அறிவை மட்டும் பெற்றிருந்தால் போதாது ஆசிரியத் தொழிலுக்கேற்ற பயிற்சியையும் பெற்றிருத்தல் அவசியம்'' என்ற கல்வித்தத்துவத்தை அடிக்கடி விளக்குவதோடு அதற்கான பலதத்துவக் கோட்பாடுகளையும் விளக்குவதில் பேராசிரியர் சிறந்து விளங்குகிறார்.

பேராசிரியர் அவர்கள் மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பில் மண்டூர்க்கிராமத்தில் பிறந்தார். யாழ்பாடும்யாழ்ப்பாணத்தில் இணுவிலில் இல்லறவாழ்க்கையைத் தொடங்கினார். இவர், திருகோணமலை இந்துக்கல்லூரி மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆகிய கல்லூரிகளிலே கல்வி கற்றார். பின்பு இலங்கைப்

பல்கலைக்கழகத்திலே கற்றுப்பட்டதாரியானார். சுவாமி விவேகானந்தரின் கல்விக்
கொள்கையில் திளைத்து ஆசிரியராகப் பணியாற்றினார். இந்திய அரசு வழங்கிய புலமைப்
பரிசிலைப் பெற்று டெல்லி சென்று ஆராய்ச்சிகள் பல செய்தார். பின்பு லண்டன் மாநகர்
சென்று பல ஆராய்ச்சிகள் செய்து எம். ஏ. பட்டம் பெற்றார். அதன் பின் இலங்கைப்
பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றிப் பலவேறுபட்ட கலாசாரச்
மாணவர்களையும் தமது கல்விச்சேவையால் கவர்ந்தார்.

இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக்கல்வியற்புலத்தின் தலைவராகப் பணியாற்றும்
பேராசிரியர் அவர்களின் சிறந்தபணியினாலும் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரி
யர் சு. வித்தியானந்தன், கலைப்பீடாதிபதி திரு. என். பாலகிருஷ்ணன் ஆகியோரின் ஆத
ரவினாலும் கல்வியியற்புலம் சிறப்புற்று விளங்குகின்றது
இக்கல்வியியற்புலத்தில் பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்களுடன்
ஒன்றிணைந்து சேவையாற்றிவரும் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. வ. ஆறுமுகம், விரி
வுரையாளர் திரு. கே. சின்னத்தம்பி, கலாநிதி: சபா ஜெயராசா, விரிவுரையாளர்
திருமதி கே. பராசசிங்கம் செல்வி எஸ். அருளானந்தம், பகுதிநேர விரிவுரையாளர்கள்
திரு.எஸ். துரைராசா, திரு. என். நல்லையா ஆகியோரையும் எம்மால் மறக்க முடியாது

கல்வியியற்புலம் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்து ஐந்தாண்டுகள் பூர்த்தியாகி
யிருந்தாலும் இக்குறுகிய காலத்தில் நூற்றுக்கணக்கான கல்வி 'டிப்ளோமா' பட்ட
தாரிகளையும், முதுமாணிப் பட்டதாரிகளையும், கலாநிதிகளையும் உருவாக்கிப் பெருமை
பெற்றுள்ளது. கல்வியியற்புலத்தில் ஆசிரியர்களும், கல்வி நிர்வாகிகளும், பட்டப்பின்
படிப்பு, முதுமாணிப்பட்டங்களை, விடுமுறைகாலங்களில் கற்க ஏற்பாடு செய்தமைக்கு
எமது கழகம் பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கு நன்றிகளைத் தெரிவிக்கின்றது.

இன்று எமது பேராசிரியருக்கு மணிவிழாக் கொண்டாடுவதிலும், அவரது நூலான
'கல்வியியற்கோவை' என்னும் நூலை வெளியிடுவதிலும் கல்விக்கழகம் பெருமையும், மகிழ்
ச்சியும் அடைகிறது. பேராசிரியர் அவர்கள் நீடூழி வாழ்ந்து நாட்டிற்கும், சமூகத்திற்கும்
பணிகள் பல ஆற்ற இறைவன் அருளைவேண்டுகின்றோம்.

சு. சிவநாயகமூர்த்தி
செயலாளர்
கல்விக்கழகம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் ப. சந்திரசேகரம்

அவர்கள்!

மணிவிழாக் கண்டு
மேலும் ஆண்டு நூறு
நோய் நொடியில்லாது
கல்விப்பணி புரிய
எமது உள்ளம் பூரித்த வாழ்த்துக்கள்

அதிபர்

# றேடியோஸ் பதி

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

---

அழகுக்கு அழகு செய்யும்
அலங்கார நகைகளுக்கு
யாழ்நகரில் சிறந்த
நகை ஸ்தாபனம்

# லலிதா ஜுவல்லறி

உரிமையாளர்,

செல்லையா இந்திரசித்து

தங்கப்பவுண் நகை வியாபாரம்

## லலிதா மாளிகை

☎ 23205

213, 133, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மணி விழாக்காணும் எங்கள் பேரரசான்
பல்லாண்டு வாழ்க!

# 15 ஆண்டு கால கல்வி உலகின்
வழிகாட்டி

# பிற்ஸ்மன் கல்வி நிலையம்

★ நிபுனத்துவம் பெற்ற ஆசிரியர்கள்

★ கண்ணியமயமான நிர்வாகம்

★ கட்டுப்பாடான கல்வி முறை

★ வியக்கத்தக்க பெறுபேறுகள்

இவற்றின் மையம்

# Bitsmans Institute

Manipay.

# அண்ணா தொழிலகம் - இணுவில்

அதி உன்னத சத்துணவு

## ஜீவாகாரம்
JEEVAHARAM
இது முன்கூட்டியே
தயாரிக்கப்பட்ட
உப உணவு

★ வளர்ந்து வரும் குழந்தைகட்கும்

★ கர்ப்ப தாய்மார்களுக்கும்

★ பாலூட்டும் தாய்மார்களுக்கும்

★ போசாக்கு குறைவான குழந்தைகளுக்கும்

★ ஏனைய யாவருக்கும் சிறந்த சத்துணவு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின், ஆரம்ப சுகாதார நிலைய குழந்தை வைத்திய திணைக்களத்தின் அதி உன்னத கண்டுபிடிப்பு

## ஜீவாகாரம்

*தயாரிப்பு:*

அண்ணா தொழிலகம்
இணுவில்

*தொலைபேசி:*

021 - 23412
021 - 23413

## தொழிலதிபர் வாழ்த்துகிறர்

"தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

பேராசிரியர் திரு. சந்திரசேகரமவர்கள்
தாம் கற்றகல்வியைப் புகட்டி இன்று பல அறிஞர்களே
உருவாக்கிய பெருமை அவரைச் சாருகின்றது.

இன்னும் பல்லாண்டுகள் சுகதேகியாக வாழ்ந்து
பல அறிஞர்களே உருவாக்க எல்லாம் வல்ல
இறைவன் அருள் பாலிப்பாராக.

**க. கனகராசா**

**மில்க்வைற் தொழிலதிபர்**

---

# YOU CAN GET YOUR COLOUR PRINTS

FASTER! SPEEDER! BRIGHTER! SHARPER! CHEEPER!

YES ITS TRUE!

Please Visit Once

# FOTO MONAS

COLLECTING CENTRE

# UNIVERSAL TELEX

550, HOSPITAL ROAD,
JAFFNA.

Phone No: 23100, 23006

மணிவிழாக்காணும்
பேராசிரியர் பெருந்தகைக்கு
நமது நல்லாசிகள்!

# நியூ மாஸ்டர் இன்ஸ்டிரீயூட்

B. M. C. ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

PRINCIPAL
J/ Ilavalai Meihandan Mahavidiyalaya
ILAVALAI.

மணிவிழாக்காணும்

பேராசிரியர்

நீடுழி காலம் வாழ்க!

வடமாகாணத்தின் மிகச்சிறந்த

- மின்சார உபகரணங்கள்
- எஸ்லோன் பைப்புகள்
- சுவர் மணிக்கூடுகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள்

நம்பிக்கையான விநியோகஸ்தர்களும்
விற்பனையாளர்களும்

# சுந்தர்சன்

யாழ்ப்பாணம் வீதி,

மத்தியசந்தை,

மானிப்பாய்.